# செப்டம்பர் - 10 - பொதுக்கால 23ம் ஞாயிறு

**முதல் வாசகம் : ஏசேக்கியல் 33 : 7- 9**

அவ்வாறே, மானிடா! நான் உன்னை இஸ்ரயேல் வீட்டாருக்கும் காவலாளியாக ஏற்படுத்தியுள்ளேன். என் வாயினின்று வரும் வாக்கைக் கேட்கும்போதெல்லாம் நீ என் பொருட்டு அவர்களை எச்சரிக்கைவேண்டும். தீயோரிடம் நான், "ஓ தீயோரே! நீங்கள் உறுதியாகச் சாவீர்கள்" என்று சொல்ல, அத்தீயோர் தம் வழியிலிருந்து திரும்பும்படி நீ அவர்களை எச்சரிக்காவிடில், அத்தீயோர் தம் குற்றத்திலேயே சாவர் ஆனால், அவர்களது இரத்தப்பழியை உன் மேலேயே சுமத்துவேன். ஆனால் தீயோரை அவர்கள் தம் வழியிலிருந்து திரும்ப வேண்டுமென்று நீ எச்சரித்தும் அவர்கள் தம் வழியிலிருந்து திரும்பாவிட்டால், அவர்கள் தம் குற்றத்திலேயே சாவர். நீயோ, உன் உயிரைக் காத்துக் கொள்வாய்.

**பதில்பாடல் :** உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்

**இரண்டாம் வாசகம் :உரோமையர் 13: 8 – 10**

சகோதர சகோதரிகளே நீங்கள் யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும். பிறரிடத்தில் அன்புகூர்பவர் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவர் ஆவார்.ஏனெனில், "விபசாரம் செய்யாதே, கொலை செய்யாதே, களவு செய்யாதே, பிறருக்குரியதைக் கவர்ந்திட விரும்பாதே" என்னும் கட்டளைகளும், பிற கட்டளைகளும், "உன் மீது அன்பு கூர்வது போல், உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" என்னும் கட்டளையில் அடங்கியுள்ளன. அன்பு அடுத்திருப்பவருக்குத் தீங்கிழைக்காது. ஆகவே அன்பே திருச்சட்டத்தின் நிறைவு.

**நற்செய்தி : மத்தேயு 18 : 15 - 20**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது" "உங்கள் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால் நீங்களும் அவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக்காட்டுங்கள். அவர் உங்களுக்குச் செவிசாய்த்தால் நல்லது. உங்கள் உறவு தொடரும். இல்லையென்றால்" இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடைய வாக்குமூலத்தால் அனைத்தும் உறுதி செய்யப்படும்" என்னும் மறைநூல் மொழிக்கு ஏற்ப உங்களோடு ஒன்றிரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு போங்கள்.அவர்களுக்கும் செவிசாய்க்காவிடில் திருச்சபையிடம் கூறுங்கள். திருச்சபைக்கும் செவிசாய்க்காவிடில் அவர் உங்களுக்கு வேற்று இனத்தவர் போலவும் வரிதண்டுபவர் போலவும் இருக்கட்டும். மண்ணுலகில் நீங்கள் தடைசெய்பவை அனைத்தும் விண்ணுலகிலும் தடைசெய்யப்படும் மண்ணுலகில் நீங்கள் அனுமதிப்பவை அனைத்தும் விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.உங்களுள் இருவர் மண்ணுலகில் தாங்கள் வேண்டும் எதைக் குறித்தும் மனமொத்திருந்தால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தை அதை அவர்களுக்கு அருள்வார்.ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே அவர்களிடையே நான் இருக்கிறேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்." ஏன்றார்.

**தியானம்:** இயேசு பிறரை மன்னிப்பதில் நாம் எவ்வாறு செயற்படவேண்டுமென முன்மாதிரி காட்டியுள்ளார். அவற்றில், விபச்சாரப்பெண்ணை மன்னித்தல், சமாரியப்பெண்ணுடனான சம்பாசனை, வலதுபுறக் கள்வனை மன்னித்தல், மறுதலித்த பேதுருவை தலைமைச் சீடராக்கியது முக்கியமானவை. இன்றைய நற்செய்தியில் அடுத்தவரை மன்னிப்பதற்கு ஆண்டவர் இயேசு இன்னொரு படிமுறையை எமக்கு உணர்த்துவதனை நாம் அவதானிக்கலாம். ஆண்டவர் இயேசுவை எமது தவறுகள், குற்றங்கள் திருத்தப்படுவது மட்டுமல்ல குற்றம் செய்வோரைத் திருத்தி நல்வழிப்படுத்த நாம் அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும் என்பதனைப் போதிக்கின்றார் (மத்தேயு 18:15-18). எம்மிடம் உள்ள மிகப்பெரிய தவறுகளை நாம் திருத்தியபின்னர் பிறரிடம் உள்ள குற்றங்களைச் சுட்டிக்காட்டுவதே முறை. நமக்குக் கடவுளின் மன்னிப்பு அருளப்படுவதுபோல பிறரும் அதே அன்பு அனுபவத்தை நமது அன்புச்செயல்கள் வழியாகப் பெற்றிட வழிவகுக்க வேண்டும். மாறாக, நம் சகோதரர் சகோதரிகளிடம் குற்றமிருப்பதாக எண்ணி நாம் செயல்படக்கூடாது. "எங்களுக்குத் தீமை செய்பவர்களை நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்" என நாம் பிறரை மன்னிக்க வேண்டும். அப்போது எமது பாவங்களும் மன்னிக்கப்படும். நாம் ஒவ்வொருவரும் அனைத்திலும் ஒன்றித்திருந்து, ஒற்றுமையோடு செயல்பட அழைக்கப்பட்டுள்ளோம் என்பதனை ஏற்றுக்கொள்வோம். எம்மிடையே கருத்து வேறுபாடுகள், பிளவுகள் தோன்றினாலும் அவற்றைப் போக்குவதற்கான வழிகளை இறையுதவியோடு தேட முன்வருவோம். அன்பும், மன்னித்து ஏற்கும் பண்பும் நம்மில் மிளிர்ந்தால் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்னும் உண்மை உலகுக்குத் தெளிவாகத் தெரியும். உணர்ந்து நடப்போம் ஏனெனில் "நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு எரிநெருப்பில் போடப்படும்".